| விண்ணின் மழைத்துளி – மண்ணின் உயிர்த்துளி | | |
|---|---|---|
| மழைநீரை சேமிப்பீர் ! | | குடிநீரை பெருக்குவீர்!! |

கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் சாதாரணக்கூட்டம் வருகிற **28.02.2019**ம் தேதி வியாழக்கிழமை காலை **11.00** மணிக்கு நகர்மன்ற கூட்ட அறையில் நடைபெற உள்ளது. கீழ்காணும் பொருள் பற்றி முடிவு செய்யப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

தனி அலுவலர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி

1) இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் **ஜனவரி 2019–**ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம். (க.எண்.1464/2016/சி1)

2) இந்நகராட்சி பொறியாளர் அவர்களின் **ஜனவரி 2019–**ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம். (க.எண்.1464/2016/சி1)

3) (i) இந்நகராட்சி நகரமைப்பு அலுவலர் அவர்களின் **ஜனவரி 2019–**ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

(ii) இந்நகராட்சி துப்புரவு அலுவலர் அவர்களின் **ஜனவரி 2019–**ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம். (க.எண். 1464/2016/சி1)

4) இந்நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வாகனம் TN 36 AC 6320-ன் உருளைகள் (Tyres) தேய்ந்து அடிக்கடி பஞ்சர் ஆவதால் புதியதாக 4 டயர்கள் வாங்கி பொருத்துவதற்கும், மேலும் இதற்காகும் உத்தேச செலவின தொகை ரூ.30,000/– (ரூபாய் முப்பதாயிரம் மட்டும்) எனவும் தெரிவிக்கப்படுகிறது. மேற்படி பணியினை மேற்கொள்ளவும் ஆகும் செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.
**அலுவலகக் குறிப்பு :–** மன்றம் அனுமதி வழங்கலாம்.

5) இந்நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வாகனம் TN 36AC 6320-க்கு புதியதாக நான்கு டயர்கள் விநியோகம் செய்து பொருத்தும் பணிக்கு 27.02.2019ல் விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

1. பனித்துளி கார் டெக்கர்ஸ்,
   ஈரோடு மெயின்ரோடு, கரட்டூர், கோபி. – ரூ.29,800/–
2. சன் மோட்டார்ஸ்,
   ஈரோடு மெயின்ரோடு, கரட்டூர், கோபி. – ரூ.30,750/–
3. கோபி மோட்டார்ஸ்,
   ஜே.ஜே. நகர், கரட்டூர், கோபி. – ரூ.28,900/–

மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளை இறுதி செய்ய மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–** வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி ரூ.28,900/– (இருபத்தெட்டாயிரத்து தொள்ளாயிரம் மட்டும்) அளித்துள்ள M/s கோபி மோட்டார்ஸ், ஜே.ஜே. நகர், கரட்டூர், கோபி அவர்களது விலைப்புள்ளியினை ஏற்கலாம்.

6) கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான மின்கலனில் இயங்கும் வாகனங்கள் 12 எண்ணிக்கைகள் உள்ளது. மேற்படி வாகனங்களுக்கு 'பேட்டரி சார்ஜ்' செய்வதற்கு 9 எண்ணிக்கை 'Junction Box' விநியோகம் செய்து பொருத்துவதற்கும், மேற்படி வாகனங்களுக்கு இருபுறமும் 'Numbering' செய்யவும் மதிப்பீட்டு செலவினம் ரூபாய் பத்தாயிரம் ஆகும். மேற்படி பணியினை மதிப்பீட்டு விலைவிகிதத்தில் இந்நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு.D.தினேஷ் அவர்களிடம் ஒப்படைப்பு பணியாக மேற்கொள்வதற்கும், செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–** மன்றம் அனுமதி வழங்கலாம்.

7) கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் ராமர் எக்ஸ்டென்சன் மயானத்தில் பொருத்தப்பட்ட Shredder-ன் Belt, Starter மற்றும் மோட்டார் காயில் ஆகியவை பழுதடைந்துள்ளது. மேற்படி பழுதுகளை சரிசெய்ய ஆகும் மதிப்பீட்டு செலவினம் ரூ.20,000/– (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) மேற்படி பணியின் முக்கியத்துவம் கருதி மதிப்பீட்டு விலைவிகிதத்தில் இந்நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திருவாளர்.எக்ஸ்புளோசிஸ் எண்டர்பிரைசஸ் அவர்கள் மேற்படி பணியினை ஒப்படைப்பு பணியாக மேற்கொள்ள பணி உத்திரவு வழங்கிட மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

ந.க.எண் 291 /2019/எச்1

8) இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு வாகனம் டிராக்டர் எண் TN 36 AA 4492–ஐ பழுது நீக்கம் செய்து தரக்கோரி சம்மந்தப்பட்ட ஓட்டுனரால் 31.01.2019 அன்று தெரிவிக்கப்பட்டது.பொது சுகாதாரப் பிரிவு வாகனப் பராமரிப்பு செலவினம் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண். 281 நாள்.26.03.2018 இல் நகர்மன்றத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்டது. இதனையடுத்து மேற்கண்ட பழுது நீக்கம் செய்து தர 21.02.2019 இல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வரிசை எண் | ஒப்பந்தப்புள்ளி கொடுக்கப்பட்ட பணிமனைதாரரின் பெயர் மற்றும் முகவரி | வாகன பழுது நீக்கம் செய்வதற்கான ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1. | லட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் ,<br>சேலம் மெயின் ரோடு,<br>மேட்டூர் டேம், சேலம். | ரூ.97,600/– |
| 2. | ஜே.வி.கே ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் ,<br>279/28-J, JVK கேம்பஸ்,<br>களராம்பட்டி மெயின் ரோடு, சேலம். | ரூ.98,900/– |

**அலுவலக குறிப்பு:–**

திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் தினசரி சேகரமாகும் குப்பைகளை எடுப்பதற்கு மேற்படி வாகனம் பயன்படுத்தப்பட்டு வருவதால் பழுது நீக்கம் செய்வது மிகவும் அவசியமாகிறது.

மேற்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண் 1 ல் உள்ள பணிமனைதாரரின் ஒப்பந்தப்புள்ளி மற்றதைக் காட்டிலும் குறைவாக உள்ளது. எனவே, லட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் பணிமனைதாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

ந.க.எண். 114/2019/H1

9) கோபிசெட்டிபாளையம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவிற்கு சொந்தமான டிப்பர் லாரி வாகனம் எண் TN 36 J 6885 க்கு தகுதிச்சான்று காலம் **06.02.2019** உடன் முடிவடைகிறது. வாகனங்கள் பராமரிப்பிற்கு ஆகும் செலவினங்களுக்கு நகர் மன்ற தீர்மான எண் **281** நாள் **26.03.2018** ல் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. எனவே, மேற்படி வாகனம் பழுது நீக்கம் செய்வதற்கு **06.02.2019**ல் பணிமனைதாரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணிமனைதாரர்களின் பெயர் மற்றும் முகவரி | அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1 | லட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ்<br>1,சேலம் மெயின் ரோடு, மேட்டூர் டேம், மேட்டூர். | ரூ.70,550/- |
| 2 | JVK ஆட்டோ டீசல் ஒர்க்ஸ்<br>JVK கேம்பஸ், களராம்பட்டி மெயின் ரோடு, சேலம். | ரூ.70,950/- |

**அலுவலகக் குறிப்பு:–**

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த விலைவிகிதம் ரூ.**70,550**/- அளித்துள்ள வரிசை எண் **1** ல் உள்ள லட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் பணிமனைதாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

10) கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் உள்ள தினசரி அங்காடி கட்டிடமானது மிகவும் பழுதடைந்து உள்ளதால் அதனை இடித்துவிட்டு புதிதாக நவீன வசதிகளுடன் கட்டிய தினசரி அங்காடியில், அடித்தளம் (Basement Floor) முதல் மற்றும் இரண்டாம்தளம் ஆகியன கட்டுவதற்கு உரிய விரிவான திட்ட அறிக்கை ரூ.**9.00** கோடி மதிப்பீட்டில் தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணிக்கு நிதி ஒதுக்கீடு பெற்று, கட்டிடப்பணிகளை மேற்கொள்ளும் வகையில் Type design approval துணை இயக்குனர் நகர் ஊரமைப்புத்துறை சேலம் அவர்களின் அலுவலகத்தில் பெறப்பட வேண்டும். எனவே, Type design approval பெறுவதற்கு உரிய வரைபடங்களை Auto cad drawing-ல் தயார் செய்து decor மூலமாக விண்ணப்பித்து உரிய வரைபட ஒப்புதல் பெறுவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.**60,000/–** க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–** மன்றம் அனுமதி வழங்கலாம்.

11) இந்நகராட்சியில் மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்கு கீழ்கண்ட விபரப்படி வைப்புத்தொகையை திரும்ப வழங்கக் கோரியுள்ளார்.

| வ.எண். | வருடம் | பெயர் | தொகை |
|---|---|---|---|
| 1) | 2011–2012 | துளசி ராம் கெமிக்கல்ஸ் | ரூ.11,000/– |
| 2) | 2011–2012 | என்விரோ டெக்.Eng | ரூ. 5,000/– |
| 3) | 2012–2013 | கிட்டு, ஒப்பந்ததாரர் | ரூ. 750/– |
| | | | ரூ.16,750/– |

மேற்படி தொகை ரூ.**16,750/–** காலாவதியாகிவிட்டதால், அன்னாருக்கு, தொகையினை வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–** மன்றம் அனுமதி வழங்கலாம்.

12) இந்நகராட்சியின் பொறியியல் பிரிவுக்கு **2019–20**ஆம் நிதியாண்டுக்கு கீழ்கண்ட பணியிளை மேற்கொள்ளவும் இதற்கான உத்தேச செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| வ. எண் | விபரம் | உத்தேச செலவினம் ரூ. |
|---|---|---|
| 1 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான பள்ளிகளில் உள்ள மின் மோட்டார்கள், மின் சாதனங்கள் ஆகியவற்றை **2019–20**ஆம் ஆண்டிற்கு பராமரிப்பு பணி செய்தல் | 3,00,000 |

**அலுவலகக் குறிப்பு :**

மேற்படி செலவினத்தினை நகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

13) இந்நகராட்சியின் பொறியியல் பிரிவுக்கு **2019–20**ஆம் நிதியாண்டுக்கு கீழ்கண்ட விபரப்படியான பணிகளை மேற்கொள்ளவும் இதற்கான உத்தேச செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| வ. எண் | விபரம் | உத்தேச செலவினம் ரூ. |
|---|---|---|
| 1 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான அலுவலக கட்டிடம் மற்றும் நகராட்சி பராமரிப்பிலுள்ள கட்டிடங்களில் உள்ள மின் உபகரணங்கள், மின் விளக்குகள் மற்றும் மின் அமைப்புகள் 2019–20ஆம் ஆண்டிற்கு பராமரிப்பு பணி செய்தல் | 3,00,000 |

**அலுவலகக் குறிப்பு :**

மேற்படி செலவினத்தினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

14) இந்நகராட்சியின் பொறியியல் பிரிவுக்கு 2019–20ஆம் நிதியாண்டுக்கு கீழ்கண்ட விபரப்படியான குடிநீர் விநியோகம் தொடர்பான பணிகளை மேற்கொள்ளவும், இதற்கான உத்தேச செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| வ.எண் | விபரம் | உத்தேச செலவினம் ரூ. |
|---|---|---|
| 1 | கோபிசெட்டிபாளையம் நகராட்சி சொந்தமான தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள 1.00 HP முதல் 100 HP வரையிலான பல்வகை மோட்டார்கள், பம்புகள், வால்வுகள், பேனல் போர்கள், ஸ்டாட்டர்கள், மின்மாற்றிகள் மற்றும் மின்சாதனங்கள், மேலும் நகராட்சி பகுதியிலுள்ள மேல்நிலை தொட்டிகளில் உள்ள மும்முனை நீர்மூழ்கி மோட்டார்கள், பேனல் போர்டுகள் & ஸ்டார்டர்கள் ஆகியவற்றினை 2019–20ஆம் ஆண்டிற்கான பராமரிப்பு பணி | 9,00,000 |
| 2 | கோபிசெட்டிபாளையம் நகராட்சி சொந்தமான தலைமை நீரேற்று நிலையத்தில் குடிநீரை சுத்தகரிப்பு செய்வதற்கு பயன்படுத்தப்படும் 2019–20ஆம் ஆண்டிற்கு திரவ குளோரின் வாங்குதல் மற்றும் 2 குளோரின் சிலிண்டர் ஆய்வு செய்தல். | 7,00,000 |
| 3 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட 30 வார்டுகளிலும் உள்ள பல வகையான நீர் மூழ்கி மின் மோட்டார்கள், கம்பரசர்கள், ஜெட் மற்றும் மோனோபிளாக் மோட்டார்கள், பேனல் போர்டுகள், ஸ்டார்ட்டர்கள், ஒயரிங் மற்றும் பைப் லைன்கள் 2019–20ஆம் ஆண்டிற்கு பராமரிப்பு பணி | 6,00,000 |
| 4 | கோபிசெட்டிபாளையம் நகராட்சி சொந்தமான தலைமை நீரேற்று நிலையத்தில் குடிநீரினை சுத்தகரிப்பு செய்ய பயன்படுத்தும் படிகாரம் (Sulphate of Alumina) 2019–20ஆம் ஆண்டிற்கு வாங்குதல் | 1,00,000 |
| 5 | கோபிசெட்டிபாளையம் நகராட்சி சொந்தமான தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள டர்பைன் பம்புகளில் பயன்படுத்தப்படும் 20–40 ஆயில் மற்றும் மோட்டார்களுக்கு பயன்படுத்த்ப்படும் கிரீஸ் 2019–20 ஆம் ஆண்டிற்கு வாங்குதல் | 1,00,000 |

**அலுவலகக் குறிப்பு :**

மேற்படி செலவினத்தினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

15) இவ்வலுவலகத்திற்கு தினசரி நாளிதழ்கள் 2018–2019–ம் ஆண்டிற்கு வாங்கிக்கொள்ளவும், அதற்குரிய உத்தேச செலவுத்தொகை ரூ.30,000/–க்கும் மற்றும் அனுப்புகை பிரிவில் வெளியூர் தபால்கள் அனுப்பி வைக்க அஞ்சல் வில்லைகள் வாங்கிக்கொள்ள உத்தேசத்தொகை ரூ.50,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதி அளிக்கலாம்.

16) கோபிசெட்டிபாளையம் நகராட்சி வார்டு எண்.14, கதவு எண்.30A, டாக்டர்.வெங்கட்ராமன் வீதி, என்ற எண்ணுள்ள வீட்டின் முன்பாக வளர்ந்துள்ள வேப்பமரம் சாய்ந்து வீட்டிற்கு பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் உள்ளதால், மேற்படி மரத்தின் பாதிப்பு ஏற்படுத்தும் கிளைகளை மட்டும் பொது ஏலம் மூலம் வெட்டி அகற்றிட மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–** மன்றம் அனுமதி வழங்கலாம்.

17) கோபிசெட்டிபாளையம் நகராட்சி ஆணையாளர் அறையில் CCTV கேமரா பொருத்துவதற்கும், மேலும் எற்கனவே அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள பழைய ஏழு CCTV (Analog camara)–க்கள் பழுதடைந்துள்ளதை மாற்றி Digital Camera–க்களை அமைத்து புதியதாக ஒயரிங் செய்வதற்கு உத்தேச செலவினம் ரூ.1,20,000/– (ரூபாய் ஒரு இலட்சத்து இருபதாயிரம் மட்டும்) ஆகும். மேற்படி பணியினை மேற்கொள்ளவும், செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–** மன்றம் அனுமதி வழங்கலாம்.

18) கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட வேங்கம்மையார் உயர்நிலைப்பள்ளியில் நுழைவு வாயிற் கதவு சிறியதாக உள்ளதால் அதனை மாற்றி பெரியதாக அமைத்துத்தர பள்ளியின் தலைமையாசிரியர் கோரியுள்ளார். மேற்படி நுழைவு வாயிற்கதவு மாற்றியமைக்க உத்தேச செலவினம்

ரூ.50,000/– (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) ஆகும். மேற்படி பணியினை மேற்கொள்ளவும், செலவினத்தை நகராட்சி கல்விநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–** மன்றம் அனுமதி வழங்கலாம்.

19) கோபிசெட்டிபாளையம் நகராட்சி ஆணையாளர் அறையில் Air Conditioner (AC) புதியதாக பொருத்துவதற்கும் மேலும் Corridor-ல் Tiles பதித்திடவும் உத்தேச செலவினம் ரூ.2.50 இலட்சம் ஆகும். (ரூபாய் இரண்டரை இலட்சம் மட்டும்) மேற்படி பணியினை மேற்கொள்ளவும், செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–** மன்றம் அனுமதி வழங்கலாம்.

20) கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட புதிய ஆஸ்பத்திரி வீதியிலுள்ள அம்மா உணவகத்தின் Steam line, Gas line and Regulator ஆகியவை பழுதடைந்துள்ளதால், அதனை மாற்றியமைக்க உத்தேச செலவினம் ரூ.1,35,000/– (ரூபாய் ஒரு இலட்சத்து முப்பத்தைந்தாயிரம் மட்டும்) ஆகும். மேற்படி பணியினை மேற்கொள்ளவும், செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–** மன்றம் அனுமதி வழங்கலாம்.

21) இந்நகராட்சி வரிவசூல் மையத்தில் உள்ள பழைய பணம் எண்ணும் இயந்திரம் பழுதடைந்துள்ளது. மேற்படி பழுதினை சரிசெய்ய உத்தேச செலவினம் ரூ.1,500/– (ரூபாய் ஆயிரத்து ஐநூறு மட்டும்) ஆகும். மேற்படி பழுதினை, சரிசெய்ய நேரடியாக இதனை விநியோகம் செய்த ‘Swaru Electronics, Coimbatore’ நிறுவனமும், செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–** மன்றம் அனுமதி வழங்கலாம்.

22) இந்நகராட்சி கரட்டூர் உரக்கிடங்கில் Bio-Mining முறையில் குப்பைகளை பிரித்தெடுத்து நிலத்தினை மீட்டெடுக்கும் பணிக்கு தேவையான இயந்திரங்கள் நிறுவப்பட்டுள்ளது. மேற்படி இயந்திரங்களை இயக்குவதற்கு மேற்படி உரக்கிடங்கில் ஏற்கனவே பெறப்பட்டுள்ள மின் இணைப்பு 307–002–780–க்கு 7kw Sectional load பெறப்பட்டுள்ளது. தற்போது கூடுதலாக 17.5kw load தேவைப்படுகிறது. அதற்கு தமிழ்நாடு மின்வாரியத்திற்கு தொகை ரூ.14,489/– (ரூபாய் பதினேழாயிரத்து நானூற்றி எண்பத்தி ஒன்பது மட்டும்) செலுத்தப்பட வேண்டும். மேற்படி மின் இணைப்பிற்கு கூடுதல் மின் பளு வாங்குவதற்கும், செலவினத்தொகை ரூ.14,489/– செலுத்துவதற்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

23) கோபிசெட்டிபாளையம் நகராட்சி ஆணையாளர் அறையில் பிரித்தெடுக்கப்பட்ட மர ஜன்னல், அலுமினியம் கதவு மற்றும் இதர பொருட்களை எடுத்துக்கொள்ளும் பணிக்கு பொது ஏலம் விட மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–** மன்றம் அனுமதி வழங்கலாம்.

24) கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட கரட்டூர் மயானத்தில் காற்று காரணமாக உடைந்த 3 சீமை வாழ நாராயண மரம் மற்றும் பட்டுப்போன சீமை வாழ நாராயண மரம் ஒரு மரம் ஆகியவற்றை பொது ஏலம் மூலம் வெட்டி அகற்றிட மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.
**அலுவலகக் குறிப்பு :–** மன்றம் அனுமதி வழங்கலாம்.

25) கோபிசெட்டிபாளையம் நகராட்சி வார்டு எண்.28 மொடச்சூர் வாரச்சந்தை வளாகத்தில் உள்ள கட்டண கழிப்பிடத்தில் உள்ள ஆழ்துளை கிணற்றில் பயன்பாட்டில் உள்ள கம்ப்ரசர் மோட்டார் மிக பழமையாக உள்ளதால் அடிக்கடி பழுதடைந்து விடுகிறது. வறட்சி காலத்தில் ஆழ்துளை கிணற்றில் தண்ணீர் மட்டம் குறையும் நிலையில் கழிப்பிட உபயோகத்திற்கு போதிய தண்ணீர் கிடைப்பதில்லை.

எனவே மேற்படி கம்ப்ரசர் மோட்டாரை மாற்றி புதியதாக Submergible Motor Pump set பொருத்தி தண்ணீர் வசதி செய்திடவும் அதற்காகும் மதிப்பீட்டு செலவினம் ரூ.90,000/—ஐ (ரூபாய் தொண்ணூராயிரம் மட்டும்) நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :—** மன்றம் அனுமதி வழங்கலாம்.

26) கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட 30 வார்டுகளின் பலவகையான நீர்மூழ்கி மோட்டார்கள், பேனல் போர்டுகள், ஸ்டார்டர்கள் பராமரிக்கப்பட்டு வருகிறது. அதில் ஒருசில மோட்டார்கள் பல ஆண்டுகளாக இயக்கப்பட்டு தற்போது பராமரிக்க இயலாத நிலையில் உள்ளது. மேலும் ஒருசில மும்முனை மோட்டார்களுக்கு பதிலாக ஒருமுனை மின்மோட்டார் பொருத்த வேண்டியுள்ளது. எனவே தற்போது புதியதாக ஒருமுனை மின்மோட்டார் 5 எண்ணிக்கைகள் மற்றும் பேனர் போர்டுகள் 5 எண்ணிக்கை வாங்குவதற்கு உத்தேச செவினம் ரூ.2,00,000/— (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) மேற்படி பணியியின மேற்கொள்ளவும் செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :—** மன்றம் அனுமதி வழங்கலாம்.

27) கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட தீயணைப்பு நிலையத்தில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கு ஆகும் மதிப்பீட்டு செலவினம் ரூ.35,000/— (ரூபாய் முப்பத்தைந்தாயிரம் மட்டும்) மேற்படி பணியின் அவசியம் கருதி இந்நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு.K.R.ஆறுமுகம் வசம் மதிப்பீட்டு விலைவிகிதத்தில் மேற்கொள்ளவும், ஒப்படைப்பு பணியாக வழங்கவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :—**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

28) இந்நகராட்சியில் தூய்மை பாரத இயக்கம், திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் (8th SHPC) கீழ் மின்கலனில் இயங்கும் வாகனங்கள் 29 எண்கள் விநியோகம் செய்யும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு பத்திரிக்கைகளில் விளம்பரம் செய்து கொடுத்தமைக்கான விளம்பரக்கட்டணம் ரூ.72,188/— (ரூபாய் எழுபத்திரெண்டாயிரத்து நூற்றி எண்பத்தெட்டு மட்டும்) ‘ரவி பப்ளிசிட்டி சர்வீஸ்’ நிறுவனத்திற்கு வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :—**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

29) இந்நகராட்சியில் IUDM 2017—18—ன் கீழ் குடிநீர் ஆதாரம் மற்றும் குடிநீர் விநியோகம் மேம்பாடு செய்யும் பணியினை ரூ.52.80 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள அரசாணை G.O. (MS) No.82. Municipal Administration and Water Supply Department 23.08.2018—ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி பணியின் விரிவான திட்ட அறிக்கையை Vol I, II, & III (DPR) மற்றும் அதற்கான வரைபடங்களை CAD Drawing கலர்பிரிண்ட் 3 நகல்கள் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையரகத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அதற்கான செலவுத்தொகை ரூ.22,620/—க்கு அனுமதியும், செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :—**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. செலவினத்தொகை ரூ.22,620/—ஐ மேற்கண்ட திரு.சா.பிரபாகரன் பணிப்பார்வையாளருக்கு தொகையினை திரும்ப வழங்கலாம்.

30) கோபிசெட்டிபாளையம் நகராட்சி வார்டு எண்.19 பார்வதி நகர் OHTயிலிருந்து கரட்டூர் பிள்ளையார் கோயில் வீதி மற்றும் மாரியம்மன் கோவில் வீதி பகுதிக்கு செல்லும் குடிநீர் விநியோக குழாயில் உள்ள 125mm சுலீஸ் வால்வு உடைந்துள்ளது. இதனால் தண்ணீர் வீணாவதுடன் குடிநீர் விநியோகம் பாதிக்கப்படுகிறது. எனவே பாதிப்பை சரிசெய்ய புதியதாக 125mm CI சுலீஸ் வால்வு வாங்கி பொருத்துவதற்கும், வார்டு எண்.30 செங்கோட்டையன் காலணி OHT Outlet குழாயில் வால்வு பொருத்த 200mm Tail Piece 2 எண்கள் தேவைப்படுகிறது. இதற்கான மதிப்பீட்டு செலவினம் ரூ.17,000/– (ரூபாய் பதினேழாயிரம் மட்டும்) குடிநீர் அவசியம் கருதி ஒப்படைப்பு பணியாக மதிப்பீட்டு விலை விகிதத்தில் இந்நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் M/s எக்ஸ்புளோசிங் எண்டர்பிரைசஸ் அவர்கள் மூலம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. செலவினத்தை நகராட்சி குடிநீர்நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

31) நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகம், திருப்பூர் பயன்பாட்டில் உள்ள UPS பழுதினை சரிசெய்தமைக்கு தொகை ரூ.9,440/– (ரூபாய் ஒன்பதாயிரத்து நானூற்றி நாற்பது மட்டும்) M/s New Mech Power Soultion உடுமலைப்பேட்டை அவர்களுக்கு வழங்குவதற்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களது கடிதம் ந.க.எண்.4401/2018/அ1, நாள்.20.02.2019ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி தொகை ரூ.9,440/–ஐ செலுத்துவதற்கும், செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–** மன்றம் அனுமதி வழங்கலாம்.

32) கோபிசெட்டிபாளையம் நகராட்சி வார்டு எண்–9 கதவு எண்.57, வாய்க்கால் வீதியில் உள்ள வீட்டின் மீது படர்ந்து வீட்டிற்கு பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் வளர்ந்துள்ள மரத்தின் கிளைகளை மட்டும் பொது ஏலம் மூலம் வெட்டி அப்புறப்படுத்த மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–** மன்றம் அனுமதி வழங்கலாம்.

33) 2019–2020ஆம் ஆண்டுக்கான கோபிசெட்டிபாளையம் நகராட்சி வரவுசெலவு திட்ட பட்ஜெட் மற்றும் 2018–2019ஆம் ஆண்டுக்கான திருத்திய பட்ஜெட் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–** மன்றம் அனுமதித்து பதிவு செய்யலாம்.

34) கோபிசெட்டிபாளையம் நகராட்சி உள்ளூர் திட்ட குழுமத்தின் அனைத்து நடவடிக்கைகளுக்கு நகர்மன்ற உறுப்பினர் கூட்டம் கூடி முடிவு செய்ய காலதாமதம் ஆகும் என்பதாலும், அவசரப்பணிகள் அடிக்கடி ஏற்பட்டு, தீர்மானங்கள் நிறைவேற்ற நீண்ட காலம் ஏற்படுவதோடு, பொதுமக்களுக்கு குறிப்பிட்ட காலகெடுவிற்குள் வழங்க இயலாத நிலை ஏற்படுகிறது. மேலும் மக்கள் சாசனப்படி குறிப்பிட்ட காலக்கெடு அரசால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. எனவே, 1971ஆம் வருடத்திய நகர் ஊரமைப்பு சட்டம் 91எ பிரிவின்கீழ், அளிக்கப்பட்ட அதிகாரங்களின்படி திட்ட அனுமதி வழங்குதல் (Planning Permission) கட்டிட விண்ணப்பங்கள், இயந்திர நிறுவன விண்ணப்பங்கள், மனைப்பிரிவு, மனை உட்பிரிவு, கட்டிட மேல்முறையீடு மற்றும் ஏனைய, இதர அன்றாட சாதாரண விண்ணப்பங்கள் மீது முடிவு செய்தல் போன்றவைகளுக்கான அதிகாரத்தை உள்ளூர் திட்டக்குழு உறுப்பினர், செயலாளர் மற்றும் ஆணையர் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–** பொது மக்களின் நலன் கருதி பொருளில் குறிப்பிட்டுள்ள மனுக்களின் மீது முடிவு செய்யும் அதிகாரத்தை உள்ளூர் திட்டக்குழு உறுப்பினர், செயலாளர் மற்றும் ஆணையர் அவர்களுக்கு வழங்க மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

35) கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட காளமேகம் வீதியில் CSI தூய பவுல் ஆலயம் கட்டிடம் கட்டி வருவது தொடர்பாக விக்டர் ஜோஸ் என்பவர் நகராட்சி ஆணையாளரை (12ம் பிரதிவாதியாக) O.S.No.33/2019 மற்றும் I.A.No.2/2019- ன்படி வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கினை நகராட்சி அதற்கு ஆகும் உத்தேச செலவினத்திற்கும் நகராட்சி நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.

36) இந்நகராட்சியின் தலைமை நீரேற்று நிலையத்தில் குடிநீர் சுத்திகரிப்பிற்கு பயன்படுத்தப்படும் குளோரின் வாயு 2018–19ஆம் ஆண்டிற்கு விநியோகம் செய்யும் பணிக்கு ரூ.6.90 இலட்சத்திற்கு நகர்மன்ற ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு ஜனவரி 2019 வரை ரூ.6,10,400/– செலவாகியுள்ளது. வரும் மார்ச் 2019 வரை சப்ளை செய்யப்பட உள்ள 4 சிலிண்டர்களுக்கு தொகை ரூ.87,200/– வழங்கப்பட வேண்டியுள்ளது. எனவே கூடுதல் செலவினம் ரூ.7,600/–க்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :-** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. செலவினத்தை நகராட்சி குடிநீர்நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

37) இந்நகராட்சி ஒப்பந்ததாரர்கள் 2019–2020ம் ஆண்டில் காலாவதியான வைப்புத்தொகைகளை மனுதாரர்கள் திரும்ப வழங்கக் கோரும் மனுவிற்கு அவ்வப்போது, உரிய தொகைகளை உரிய வருவாய் நிதி, குடிநீர்நிதி மற்றும் கல்விநிதிகளில் திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.

38) இந்நகராட்சியில் IUDM (2018-2019)-ன் கீழ் குடிநீர் ஆதாரம் மற்றும் விநியோகம் மேம்பாடு செய்யும் பணிக்கு பயன்படுத்தப்பட உள்ள DI பைப்புகள், HDPE பைப்புகள், மின்மோட்டர்கள் மற்றும் இதர பொருட்கள் மூன்றாம் தரப்பு ஆய்வு (Third Party Inspection) மேற்கொள்ளும் பணிக்கு உத்தேச செலவினம் ரூ.10.00 இலட்சத்திற்கு (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) அனுமதியும் மேலும் மேற்படி செலவினத்தை மேற்படி திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளவும், இதற்கான நிறுவனத்தை தேர்வு செய்திட ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.

39) இந்நகராட்சிப்பணியாளர்கள் 2019–2020ம் ஆண்டில் ஓய்வு பெறுவதற்கும், பணியிடை காலமாகிவிட்டாலும் அன்னாரின் குடும்ப வாரிசுதாரருக்கும், குடும்பநலநிதி மற்றும் ஓய்வு பெறுவபருக்கு சிறப்பு சேமநலநிதி வட்டித்தொகை பங்குத்தொகைகளை நகராட்சி பொதுநிதிக் கணக்கிலிருந்தும், சந்தா தொகையை சிறப்பு சேமநலநிதிக் கணக்கிலிருந்து வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.

40) இந்நகராட்சிக்கு சொந்தமான L.I.G.காலணியில் குடியிருந்து வரும் திரு.G.K.ராஜாமணி அவர்கள் 01.04.2017 முதல் 2/19 முடிய (1 மாத வாடகை ரூ.1750/–) வீதம் ரூ.40,250/– செலுத்தப்படாமல் உள்ளது. அதனை தொடர்ந்து அக்குடியிருப்பினை ஆராய்ந்ததில், அக்குடியிருப்பு இடிந்த நிலையில் உள்ளதாக அக்குடியிருப்பில் உள்ளோர் 01.04.2017ல் அக்குடியிருப்பினை காலி செய்துவிட்டார் என அறிய வருகிறது. தற்பொழுது அக்குடியிருப்பு காலியாக உள்ளது. யாரும் அக்குடியிருப்பை பயன்படுத்த முடியாத மிகவும் பழுதடைந்த சூழ்நிலையில் உள்ளது.

எனவே அக்குடியிருப்பில் எந்தவொரு நபரும் இல்லாததாலும், அக்குடியிருப்பு காலியாக உள்ளதாலும், 01.04.2017 முதல் 2/19 மாதம் முடிய வாடகை தொகை ரூ.40250/–ஐ Demand-ல் நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. வரிவிதிப்பு எண்.21 (குடியிருப்பு)

**அலுவலக குறிப்பு:–** மன்றம் அனுமதிக்கலாம்.

41) இந்நகராட்சியில் கீழ்கண்டுள்ள விவரப்படியான பணிகளை செய்வதற்கு 27.02.2019 தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடுத் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் விபரம் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட குடிநீர் பிரதான குழாய்களில் ஏற்படும் வெடிப்புகள் தனியார் சேவை மூலம் (2019–2020) வருடாந்திர பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் | 9,90,000 | M/s.ஸ்ரீசரவணன் & கோ ஒப்பந்ததாரர் | 0.30 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | T.சுகுமார் ஒப்பந்ததாரர் | 0.98 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட தலைமை நீரேற்று நிலையத்தில் 20 HP & 30 HP நீர் மூழ்கி மோட்டார்கள் பழுது பார்க்கும் பணி | 1,46,000 | M/s. எக்ஸ்புளோசிவ் எண்டர்பிரைசஸ் ஒப்பந்ததாரர் | 0.34 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/s. சசிகலா எலக்ரிக்கல் ஓர்க்ஸ் ஒப்பந்ததாரர் | 0.57 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 3 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட தலைமை நீரேற்று நிலையத்தில் சுத்திகரிக்கப்படாத நீர் (Raw Water) கிணற்றிலுள்ள மணலை அப்புறப்படுத்துதல் பணி | 90,000 | M/s. குமரன் எஞ்சினீரிங் ஓர்க்ஸ் ஒப்பந்ததாரர் | 0.64 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/s. ஹைட்ரோமெக் எஞ்சினீரிங் ஓர்க்ஸ் ஒப்பந்ததாரர் | 6.96 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 4 | மொடச்சூர் நகராட்சி மேல்நிலைப்பள்ளியில் கழிப்பிட பாரமரிப்பு பணி | 2,00,000 | R.மாணிக்கம் ஒப்பந்ததாரர் | 0.20 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | D.தினேஷ் ஒப்பந்ததாரர் | 1.20 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 5 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.15–ல் உள்ள தினசரி அங்காடி பொது கழிப்பிடம் மற்றும் பராமரிப்பு பணி | 3,00,000 | K.R.ஆறுமுகம் ஒப்பந்ததாரர் | 0.25 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | V.தங்கராஜ் ஒப்பந்ததாரர் | 1.50 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 6 | கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் குப்பை கிடங்கில் அமைக்கப்பட்ட 3TPD MCC (நுண்ணிய உரம் செயலாக்க மையம்) கட்டுதல் பணிக்கு கிரவால் மண் கொட்டுதல் பணி | 1,65,000 | M/s.ஸ்ரீசிவராம் & கோ ஒப்பந்ததாரர் | 0.13 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | S.ஜெயபிரகாஷ் ஒப்பந்ததாரர் | 0.85 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 7 | கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் ராமர் எக்ஸ்டென்சன் மயானத்தில் அமைக்கப்பட்ட 4TPD MCC (நுண்ணிய உரம் செயலாக்க மையம்) கட்டுதல் பணிக்கு கிரவால் மண் கொட்டுதல் பணி | 45,000 | S.ஜெயபிரகாஷ் ஒப்பந்ததாரர் | 0.13 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/s.ஸ்ரீசிவராம் & கோ ஒப்பந்ததாரர் | 0.85 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

**அலுவலகக்குறிப்பு :-**

1. மேற்படி பணிகளில் வ.எண்.1–க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள M/s.ஸ்ரீசரவணன் & கோ அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.
2. வ.எண்.2–க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள M/s. எக்ஸ்புளோசிவ் எண்டர்பிரைசஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.
3. வ.எண்.3–க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள M/s. குமரன் எஞ்சினீரிங் ஓர்க்ஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.
4. வ.எண்.4–க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள R.மாணிக்கம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.
5. வ.எண்.5–க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள K.R.ஆறுமுகம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.
6. வ.எண்.6–க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள M/s.ஸ்ரீசிவராம் & கோ அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.
7. வ.எண்.7–க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள S.ஜெயபிரகாஷ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.

ந.க.எண் 374/2019/எச் 1

42) ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை தமிழ்நாடு சட்டமன்ற பேரவை விதி எண்.110 இன் கீழ் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 11.02.2019 அன்று வெளியிடப்பட்ட அறிவிப்பு வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் கிராமப்புற மற்றும் நகர்ப்புர ஏழைகளுக்கு குறிப்பாக விவசாய தொழிலாளர்கள் மற்றும் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ள ஏழைத் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு ஒரு முறை சிறப்பு நிதியுதவி 2000 ரூபாய் வழங்குவதற்கான வழிகாட்டு நெறிமுறைகளை அரசு ஆணை (நிலை) எண். 20 ஊரக வளர்ச்சி (மற்றும்) ஊராட்சி (ம.அதி 3) துறை நாள் 13.02.2019 இல் உத்திரவிடப்பட்டுள்ளது. மேற்படி அரசு ஆணையின் படி மேல் நடவடிக்கை தொடர நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் 08.02.2019 ஆம் நாளிட்ட கைபேசி வழி குறுஞ் செய்தியில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் Whats App செய்தியில் மேற்படி வறுமை கோட்டிற்கு கீழ் உள்ளவர்களை கண்டறிதல் செய்யும் பணியினை 28.02.2019க்குள் கூடுதலான பரப்புரையாளர்களை ஈடுபடுத்தி முடிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேற்காணும் அரசாணை மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களால் தெரிவித்துள்ளவாறு இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள ஏழைகளுக்கு ஒரு முறை சிறப்பு நிதி உதவி ரூ.2000/ வழங்கப்படும் என்பதை பொது மக்களிடையே தெரிவித்து அரசு ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ள புள்ளி விவரங்களை பொது மக்களிடம் இருந்து பெற்று Online இல் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும். மேலும் 22.02.2019 ஆம் நாளன்று நடைபெற்ற ஊரக வளர்ச்சி துறை இயக்குநர் அவர்களின் காணொலி காட்சி ஆய்வு கூட்டத்தில் மேற்படி சிறப்பு நிதி உதவி வழங்கக் கோரும் விண்ணப்பங்களை பொது மக்களிடமிருந்து பெற்றுக் கொள்வதற்கு ஏதுவாக விண்ணப்பப் படிவங்கள் (4 பக்கம்) இணையதளத்தில் மாதிரி வெளியிடப்பட்டுள்ளது என்றும் இதனை அச்சகத்தின் மூலம் பிரதிகள் எடுத்து அதில் கோரப்பட்டுள்ள விவரங்களை நேரடியாக கணக்கெடுப்பாளர்களை கொண்டு வீடு வீடாக சென்று கணக்கெடுக்கும் படியும் அதற்கான ஒப்புகைச் சீட்டை வழங்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இக்கணக்கெடுப்புக்கு DBC பணியாளர்கள், பரப்புரையாளர்கள் (Animators) மற்றும் வருவாய் உதவியாளர்கள் பயன்படுத்திக் கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நகராட்சியால் DBC பணியாளர்களின் ஒப்பந்த காலம் ஜனவரி 2019 ஆம் மாதத்துடன் முடிவடைந்து விட்டதால். மேற்படி பணியாளர்களை இக்கணக்கெடுப்பில் ஈடுபடுத்த இயலாது. ஈரோடு மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல் முறைகள் Roc.No.11701/2018/G2 நாள் 23.07.2018 ன் படி Unskilled Laborers Mazdoor Category II என்ற விபரத்தில் உள்ளபடி ரூ.312/ என்ற விலைவிகிதத்திற்கு மிகாமல் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள மகளிர் சுய உதவிக் குழுக்களின் விலைப்புள்ளி பெற்று 30 பணியாளர்களை கொண்டு 10 தினங்களுக்குள் இப்பணியினை மேற்கொள்ளவும் இதன் அடிப்படையில் 25.02.2019 அன்று மகளிர் சுய உதவி குழுக்களிடம் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ் கண்டவாறு விலைப் புள்ளிகள் வரப்பெற்றது.

| வ. எ ண் | மகளிர் சுய உதவிக் குழுக்களின் பெயர் மற்றும் முகவரி | நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு |
|---|---|---|
| 1 | மகாத்மா காந்தி மகளிர் சுய உதவிக்குழு, 25, ஸ்ரீ நகர், கோபிசெட்டிபாளையம். | ரூ. 320 |
| 2 | சௌந்தர்யம் மகளிர் சுய உதவிக் குழு, 5, மாருதி நகர் எக்ஸ் டென்ஷன், கோபிசெட்டிபாளையம். | ரூ. 325 |
| 3 | அன்னை சந்தியா மகளிர் நாணய சங்கம், காமாட்சியம்மன் கோவில் வீதி, புதுப்பாளையம், கோபிசெட்டிபாளையம். | ரூ. 312 |

கணக்கெடுப்பு செய்து பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை உடனடியாக கணினியில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டியுள்ளது. மேலும் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள பொது மக்களின் புள்ளி விவரங்கள் அடங்கிய விண்ணப்ப படிவங்களை கணினியில் பதிவேற்றம் செய்ய 25.02.2019 அன்று உள்ளூர் கணினி நிறுவனங்களிடம் விலைப்புள்ளி கோரப்பட்டு கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ.எண் | கணினி நிறுவனங்களின் பெயர் மற்றும் முகவரி | பதிவேற்றம் செய்ய விண்ணப்ப படிவம் ஒன்றுக்கு |
|---|---|---|
| 1 | ஸ்டார் பிரிண்ட் & ஸ்டேசனரி, 59, எஸ்.டி.என். காலனி, கோபிசெட்டிபாளையம். | ரூ. 15 |
| 2 | எல்.கே. டிசைனர்ஸ், சௌந்தர பாணிடியன் வீதி, கோபிசெட்டிபாளையம். | ரூ. 20 |
| 3 | ஜெய் கம்பியூட்டர்ஸ், 86, கச்சேரி வீதி, கோபிசெட்டிபாளையம். | ரூ. 25 |

கணக்கெடுப்பு பணி மேற்கொள்வதற்காக மகளிர் சுய உதவிக் குழுக்களால் கொடுக்கப்பட்ட விலைப்புள்ளிகளில் வரிசை எண் 3 இல் உள்ள குறைவான விலைவிகிதம் ரூ.312 அளித்துள்ள அன்னை சந்தியா மகளிர் நாணயச் சங்கம் விலைப்புள்ளியினை ஏற்கலாம்.

கணக்கெடுப்பு பணி மேற்கொண்டு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவங்களை கணினியில் பதிவேற்றம் செய்வதற்கான வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வரிசை எண் 1 இல் குறைவான விலைவிகிதம் அளித்துள்ள ஸ்டார் பிரிண்ட் & ஸ்டேசனரி நிறுவனத்தாரின் விலைப்புள்ளியை ஏற்கலாம்.

வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ளவர்களின் புள்ளி விவரங்களை சேகரிக்கும் பணியினை உடன் முடிக்க வேண்டியுள்ளதாலும் இப்பணியின் அவசர அவசியம் கருதியும் மன்றத்தின் அனுமதியை எதிர் நோக்கி குறைவான விலைவிகிதம் அளித்துள்ள அன்னை சந்தியா மகளிர் நாணயச் சங்கத்திற்கும் மற்றும் ஸ்டார் பிரிண்ட் & ஸ்டேசனரி நிறுவனத்தாருக்கும் வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

மேலும், ஒரு முறை சிறப்பு நிதியுதவி வழங்கும் திட்ட விண்ணப்ப படிவம் (4 பக்க விண்ணப்பம்) Copier paper இல் 100 படிவங்கள் அச்சிட்ட GST யுடன் சேர்ந்து ரூ. 472/ ஆகும் என தமிழ்நாடு மல்டி பர்பஸ் இன்கோ சர்விஸ், திருச்சி அவர்களிடமிருந்து விலைப்புள்ளி பெறப்பட்டுள்ளது மற்றும் ஒப்புகைச் சீட்டு 100 அச்சிட GST யுடன் சேர்த்து ரூ.159.30 ஆகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது

எனவே அவசர அவசியம் கருதியும், தமிழக முதல்வரின் சட்டமன்ற விதி 110 இன் கீழ் அறிவிக்கப்பட்ட திட்டம் என்பதாலும், கணக்கெடுப்பு பணியினை உடன் மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும், மேற்படி அச்சகமானது கூட்டுறவு அச்சகம் என்பதாலும் மேற்படி விலைப்புள்ளியில் தெரிவிக்கப்பட்டுள்ள விலை விகிதத்தில் 15000 விண்ணப்ப படிவங்களும் 15000 ஒப்புகைச் சீட்டும் அச்சிட்டு வழங்க மேற்படி நிறுவனத்திற்கு பணி ஆணை வழங்கியமைக்கும் மேலும் கீழ்காணும் விவரப்படி ஆகும் செலவினங்களுக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

| | |
|---|---|
| 1. கணக்கெடுப்பு பணி மேற்கொள்ள | ரூ 93,600 |
| 2. கணினியில் பதிவேற்றம் செய்ய | ரூ 1,30,000 |
| 3. விண்ணப்பப் படிவம் 15000 எண்ணிக்கை | ரூ 70,800 |
| 4. ஒப்புகைச் சீட்டு 15000 எண்ணிக்கை | ரூ. 24,000 |
| | 3,18,400 |

எனவே மேற்படி அனைத்து செலவினங்களுக்கும் சேர்ந்து உத்தேச செலவினம் ரூ. 3,18,400/ (ரூபாய் மூன்று லட்சத்தி பதினெட்டாயிரத்து நானூறு மட்டும்) க்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.